# கொள்கை அறிக்கை

மேன்மைதங்கிய ஜனாதிபதி

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

1996

6632

-6-1998

புஸ்தகாலய.

# கொள்கைப் பிரகடனம்

இலங்கைக் குடியரசின் பாராளுமன்றத்தின்
அங்குரார்ப்பண விழா

*1996 பெப்புருவரி 09*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
அதிமேதகு சனாதிபதி

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா
குமாரதுங்கா

அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே,
மாண்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர்களே,

எனது அரசாங்கத்தின் நடப்பு ஆண்டுக்கான கொள்கைகளை சமர்ப்பிப்பதற்கு இந்தச் சீருயர் சபையில் உரைநிகழ்த்தும் சிறப்புரிமையினைக் கொண்டவராக இருக்கின்றேன். கடந்த ஆண்டின் சனவரி மாதத்தில் நான் விரிவான கொள்கை விளக்க உரையொன்றை சமர்ப்பித்தேன். அதன்பின்னர் "வருங்காலத்துக்கான அத்திவாரம் இடுதல் - அரசாங்கத்தின் பொருளாதார அறிக்கை 1994-1995" என்னும் ஆவணமும் இச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அபிவிருத்தித் துறையில் அரசாங்கம் மேற்கொண்ட பணிகள் அந்த ஆவணத்தில் விபரிக்கப்பட்டு இருந்தன.

சனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீண்டும் நிலைநாட்டுதல்

எனது முதலாவது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டிருந்தவாறு எனது அரசாங்கம் "சட்டவாட்சி உறுதியாக நிலைகொண்ட செவ்வனே இயங்குகின்ற சனநாயகத்தைப் பேணிக்காப்பதில்" ஈடுபாடு கொண்டுள்ளது. சனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு நாங்கள் ஏலவே எடுத்திருந்த சில முக்கியமான நடவடிக்கைகள் பற்றி அதில் குறிப்பிட்டிருந்தேன். கடந்த வருடத்தில் அவற்றைவிட மேலும்பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஒடுக்குமுறையின்பாற்பட்ட அவசரகால ஒழுங்குவிதி ஏற்பாடுகள் நீக்கப்பட்டதுடன் மிகவும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே அவை பிரயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டன. அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் ஆட்சிபுரிதல் முழுமையாகவே முடிவுறுத்தப்பட்டுள்ளது. நாட்டின் ஒருபகுதியில் நிலவும் தீவிரப் போரின் விளைவுகளால் ஏற்பட்ட பல்வேறு நிலைமைகளை எனது அரசாங்கம் பயனுறுதி வாய்ந்தவாறு நிருவகித்துக் கட்டுப்படுத்தி உள்ளது. அதனைச் செய்வதற்கு அவசரகால ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படவில்லை எனலாம். அவசரகால ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்பட்டு இருப்பின் அது மிகவும் குறுகிய காலப்பகுதிக்கேயாகும். எண்ணெய்க் குதங்களில் ஏற்பட்ட தீயும் அண்மையில் கொழும்பு கோட்டையில் ஏற்பட்ட குண்டுவெடிப்பும் மேற்கூறிய நெருக்கடி நிலைகளுக்கு உதாரணங்களாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்கு ஆட்களைக் கைது செய்தல் தொடர்பில் பிறப்பிக்கப்பட்ட விசேட அறிவுறுத்துரைகள் துணைபுரிந்தன.

மீளமைக்கப்பட்ட மனித உரிமைகள் செயலணிக் குழுவும் தம்மிச் சையின்றி ஆட்களை அகற்றுகையை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவும் மனித உரிமைகளைப் பெரிதும் மதிப்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும்.

கடந்த இரண்டு தசாப்தங்களில் நாட்டைப் பாதித்த பெருநோயின் தாக்கங்களை எதிர்த்து நிற்பதற்கு சனநாயகச் சமூகமொன்றின் பிரதான அமைப்புகளின் ஒன்றான தேர்தல் செயல்முறைக்கும் இயலாது போயிற்று. தேர்தலோடு சம்பந்தப்பட்ட வன்முறை காரணமாக பாதிப்புற்றவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் அத்தகைய வன்முறைகளை நுண்ணாய்வு செய்யவும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

சனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ள மிகைப்பட்டதும் அனைத்து விடயங்களையும் அளாவியதுமான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு எனது அரசாங்கம் இடையறாது ஆட்சேபித்தமை காரணமாக சனநாயகம் மீண்டும் நிலைநாட்டப்பெற்று இனிது இயங்குவதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதென்பதை நான் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

### இலஞ்சம், ஊழல், வீண்விரயம் ஆகியவற்றை ஒழித்தல்

எனது முதலாவது கொள்கைப் பிரகடனத்தில், "நாங்கள் இலங்கையின் பொதுமக்கள் வாழ்வினை துப்புரவாக்கும் பணியில் இறங்கியுள்ளோம். எமது நாட்டிலுள்ள ஊழல்களையும் மோசடிகளையும் ஒழிப்பதற்கு உறுதியானதும் தளராததுமான முயற்சியொன்றை எடுக்கத்தவறும் பட்சத்தில் எமது சமூக அமைப்புகளின் ஆதாரத்தளம் உருக்குலைந்து போகுமென்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்" என நான் கூறியிருந்தேன்.

படுமோசமான நிலையை அடையும் அளவுக்கு எமது சமூகத்தை இலஞ்சம், ஊழல், வீண்விரயம் என்பன ஏப்பமிட்டிருந்தன. இதன் காரணமாக அரசாங்க நிறுவனங்களின்மீதும் அனைத்து அரசாங்கக் கட்டமைப்புகளின் மீதும் பொதுமக்கள் வெறுப்புக் கொண்டனர். பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமூக நிறுவனங்களின் மீது பொதுமக்களது நம்பிக்கையினை மீண்டும் ஏற்படுத்துவதற்கு அதி முதன்மை கொடுத்தது. இது எந்தவகையிலும் எளிதான காரியமாக அமையவில்லை.

இந்த நோய்களிலிருந்து எமது சமூகத்தை ஒரேநாளில் குணப்படுத்தக் கூடிய அருமருந்து எதுவும் இல்லை. ஆனால், இந்த நோயினை எதிர்த்துப் போராடும் எமது அரசாங்கத்தின் திடசங்கற்பத்துக்கு உதாரணமாக, முழுமையான சுயாதீனம்கொண்ட இலஞ்ச ஊழல் பற்றிய நிரந்தர ஆணைக் குழுவொன்றை நியமிப்பதற்கு வழிவகுக்கும்வகையில் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது சட்டவாக்கம் திகழ்ந்தது. இந்தக் கொள்ளை நோயினை எதிர்த்துப் போராடுவதற்கு இலஞ்ச ஆணையாளர் திணைக்களம் தவறிய காரணத்தினால் அதற்குப் பதிலாக இலஞ்ச ஊழல் தவறுகளை ஆய்ந்து வழக்குத் தொடுப்பதற்கு உண்மையான அதிகாரத்தை பிரயோகிக்கக்கூடிய அரசியல் செல்வாக்குக்கு அப்பாற்பட்ட நிறுவனமொன்று தாபிக்கப்பட்டது. பொது மக்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்குத் துரோகம் செய்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடியவாறு ஊழல் குற்றத்துக்கு புதிய வரைவிலக்கணம் அளிக்கப்பட்டது. பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்குத் தடையாக இருந்த நடவடிக்கைமுறைகள் நீக்கப்பட்டன. அனைத்து நிருவாக முறைகள்மீதும் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையினை மீண்டும் ஏற்படுத்துவதற்கு இன்றியமையாத நேர்மை உணர்ச்சியினையும் நாணய உணர்ச்சியினையும் அரசாங்க அலுவலர்களுக்குப் புகட்டுவதற்கும் மேற்கூறிய சட்ட ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசாங்கத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பதவிகளில் உள்ளவர்களது ஊழல்களும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதலும் அனுமதிக்கப்படாது என்பதை சுட்டிக்காட்டுவதற்கு அரசாங்க சபைகளிலுள்ள தவறான பழக்கங்களையும் ஒழுங்கீனங்களையும் சார்ந்த நிகழ்வுகளை ஆராய்வதற்கு சனாதிபதி விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. சுயமாகத் தீர்மானங்களை எடுக்க ஊக்குவிக்கும்வகையில் அமைந்த வெகுமதி அளிப்பு முறையொன்றை அறிமுகப்படுத்துவதன்மூலம் நேர்மையும் வினைத்திறமையும்மிக்க அரசாங்கச் சேவையொன்றை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

அரசாங்க நிதியங்களை வீணே செலவு செய்வதைக் குறைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அமைச்சர் பதவிகளை அல்லது நிறைவேற்றுப் பதவிகளை வகித்தவர்களது எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு எந்தவித நன்மையும் தராதவகையில் ஆட்சியாளர்களின் புகழ்ச்சிக்காக மட்டுமே நடாத்தப்பட்ட மாபெரும் அரச வைபவங்கள், தமாஷாக்கள் ஆகியவற்றுக்குச் செய்த வீண்பணவிரயங்கள் தடுக்கப்பட்டுள்ளன.

செலவினங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுள் இராணுவச் செலவினம் முக்கிய உதாரணமாக விளங்குகின்றது. கடந்த காலத்தில் இராணுவப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் என்ற கோதாவில் மிகப்பெரிய பணத்தொகைகள் செலவிடப்பட்டிருந்த தெனினும் அப்பணங்களின் பெருந்தொகையான பணங்கள் அதிகாரபீடத்திலிருந்தவர்களதும் தரகர்களினதும் சாக்குகளுக்குச் சென்றடைந்தமை வருத்தப்பட வேண்டிய உண்மையாகும். இதன் விளைவாக எமது படைதாங்கு சேவைகளுக்கு வேண்டிய போதுமான. உபகரணங்கள் போய்ச்சேரவில்லை. எமது வீரம்மிக்க படையினர் மிகுந்த திறமையுடன் போர்புரிந்தனரெனினும் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் சாதகமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டது. இந்த அரசாங்கத்தின் கீழ், இந்த நிலைமை முற்றாக மாற்றப்பட்டது. யுத்த உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட பணங்கள் சிறந்தமுறையில் உபயோகிப்பதை உறுதிப்படுத்துவதற்கும் யுத்தத்துக்கு முன்னேறிய படையினருக்குத் தேவையான சகல உபகரணங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டிய செலவுகளைச் செய்வதை உறுதிப்படுத்துவதற்கும் நாங்கள் சகல முயற்சிகளையும் எடுத்தோம்.

தெளிந்த நோக்குடைய அரசியல் தலைமைத்துவத்தின் உதவியுடனும் நன்கு திட்டமிடப்பட்ட போர் திறமுறைகளின் உதவியுடனும் எமது படைகள் இலங்கைக்கு பெருமையினைத் தேடித்தந்துள்ளன. அத்துடன், சில காலத்துக்கு முன்னர் நினைக்கவும் முடியாத பல வெற்றிகளை எமது நாட்டுக்கு ஈட்டித் தந்துள்ளனர்.

## அரசியலமைப்புச் சீர்திருத்தம்

பொதுசன ஐக்கிய முன்னணியின் இன்னொரு வாக்குறுதி என்னவென்றால் எமது நாட்டு அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளை புதுப்பித்து மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதேயாகும். 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பானது அதன் ஆரம்பத்தையும் அது பிரகடனப்படுத்தப்பட்ட முறையினை நோக்குமிடத்து ஆட்சியாதிக்க இயல்பினைக் கொண்டதென்பதும் ஆட்சியாதிக்க விடயங்களைக் கொண்டதென்பதும் புலனாகும். அது விரைவான பொருளாதார அபிவிருத்திக்குத் துணைபுரியவில்லை என்பதுடன் சகல நாட்டு மக்களினதும் அபிலாசைகளை பிரதிபலிப்பதாகவும் அமையவில்லை. அந்த அரசியலமைப்பின் மூலம் அமுலுக்குக் கொண்டு வந்திருந்த ஆட்சியாதிக்கக் கட்டமைப்புகளை நீக்குவதற்கு அதிமுதன்மை வழங்கவேண்டி இருந்தது. அரசியலமைப்புப்பற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழுவினைப் பயன்படுத்தி அரசியலமைப்பு சீர்திருத்தத்தை ஆரம்பிப்பதற்கு இந்த

அரசாங்கம் பதவிக்கு வந்தவுடனேயே நடவடிக்கை எடுத்தது. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற அரசியல் கட்சிகளின் பொதுவிணக்கத்தைப் பயன்படுத்துவதன்மூலம் புதிய அரசியலமைப் பொன்றை வகுத்துக்கொள்வதற்கு நாங்கள் யோசனை கூறுகின்றோம். தொழில்துறைச் சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஏனைய நலனார்வம் கொண்ட கட்சிகள், சாதாரண மக்கள் ஆகியோரது அபிப்பிராயங்களை திரட்டியுள்ளோம். அவர்கள் அனைவரும் இதில் பேரூக்கம் காட்டியுள்ளனர். இந்த அபிப்பிராயங்களின் அடிப்படை யிலேயே புதிய அரசயலமைப்பு வரையப்படும். எமது மக்களது அபிலாசை களை உள்ளடக்கிய நீடுநிலைத்திருக்கும் உயிர்த்துடிப்புள்ள ஆவணமாக அந்த அரசியலமைப்பு திகழுமென நாங்கள் உறுதியாகக் கருதுகின்றோம். 2/3 பங்கு பெரும்பான்மை இல்லாமை எமக்கு மேலும் வலுவினை ஊட்டுகின்றதொன்றாக அமையுமெனவும் ஏனைய கட்சிகளுடன் கலந்தாலோசிக்கும் செயற்பாங்கானது பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த எமது மக்களது அங்கீகாரத்தைப் பெறுகின்ற அரசியலமைப்பொன்றை உருவாக்க உதவும் எனவும் அதனாலேயே அந்த அரசியலமைப்பு நீடுநிலைத்திருக்குமொன்றாகவும் நாட்டுக்குப் பொருத்தமானதொன்றா கவும் திகழுமெனவும் நாங்கள் கருதுகின்றோம்.

புதிய அரசியலமைப்பில் அதிகாரப்பரவலாக்கல் பற்றிய ஏற்பாடுகள் சேர்க்கப்படும். அந்த அரசியலமைப்பின்மூலம் நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி பதவியானது சம்பிரதாயமுறையின் பாற்பட்ட ஒரு பதவியாக மாற்றப்படும். பாராளுமன்றத்தின் இறைமை மீண்டும் நிலைநாட்டப்படும். முக்கியமான சில பதவிகளின் சுயாதீனத்தையும் வலுவினையும் உறுதிப்படுத்துகின்ற ஏற்பாடுகளை யும் புதிய சில உரிமைகளையும் அங்கீகரிக்கின்ற அடிப்படை உரிமைகள் மற்றும்சுதந்திரங்கள் பற்றிய பட்டய ஆவணமொன்றும் அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்படும். நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதிப் பதவியினை ஒழிப்பதற்கு நாங்கள் கொண்ட ஈடுபாடு கைவிடப்பட வில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக அரசியலமைப்புக்குச் செய்யப்படும் திருத்தங்கள் எதிர்பார்த்த பலனை அளிப்பதில்லையென நாங்கள் கருதுகின்றோம். தற்போதைய சனாதிபதி பதவியின் இயல்பினைக்கொண்ட ஒரு நிறுவனமானது அரசியலமைப்பின் பல்வேறு ஏனைய விடயங்களின்மீது ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது. எனவே, இறைமையுள்ள பாராளுமன்றம் ஒன்றுக்கு முழுவதும் அளாவியவாறு அதிகாரத்தை மாற்றம்செய்யாமல் தற்போதைய சனாதிபதி முறைமையை ஒழித்தல் காரணமாக சில இடைமுறிவுகள் ஏற்படுமென்பது திண்ணம். அது தற்போதைய நிலைமையினை மேம்படுத்துவதற்கு உதவாது. அதனைச் சீர்குலைக்கவே உதவும். ஆட்சியாதிக்கம்கொண்ட 1978 அரசியலமைப்பின் கீழ் நாங்கள் செயற்படுவோமெனினும் இந்த

நாட்டின் பெரும்பான்மையின மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு துரோகம் செய்யவில்லை என பெருமிதத்துடன் கூறுகின்றோம். பொதுவாக இந்த அரசாங்கமும் விசேடமாக சனாதிபதியும் தற்போதைய அரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தவில்லை என்பதிலும் பெருமைப் படுகின்றோம்.

### யுத்தத்துக்கும் இனமோதலுக்கும் ஒரு தீர்வினைக்காணுதல்

இனப்பிரச்சினை மற்றும் வடக்கு — கிழக்கில் நிலவும் யுத்தம்பற்றிய எமது கொள்கையானது ஆரம்பத்திலிருந்தே மிகத் தெளிவாகவும் மிகுந்த மனஉறுதியோடும் விளக்கப்பட்டிருந்தது. இந்தச் சீருயர் சபையில் நான் கடந்த ஆண்டில் பின்வருமாறு குறிப்பிட்டேன்: "சகல சமூகத்தின ரும் பாதுகாப்பாகவும், ஏமமாகவும் வாழக்கூடியதும், மனித கௌரவம் மதிக்கப்படுவதும்,பொதுவாழ்வில் அனைவரும்சமமாக மதிக்கப்படுவது மான இலங்கை நாட்டைக் காண்பதற்கு நாங்கள் அவாவுறுகின்றோம். சகல சமூகத்தினரும் தமது தனித்துவத்தை வெளிப்படுத்த இடம்கொடுக்கப்பட வேண்டுமெனவும் தேசிய, மாகாண, உள்ளூர் ஆகிய மட்டங்கள் யாவற்றிலும் நாட்டின் குடிமக்களாக இனிது வாழும் வசதிகளை உடையவர்களாக இருத்தல் வேண்டுமெனவும் நாங்கள் நம்புகின்றோம். அகிம்சையினையும் சனநாயகத்தையும் பேணுவதில் எமக்குள்ள ஈடுபாடு காரணமாக எமது கொள்கை உள்ளக மோதல்களையும் அமைதியின்மைகளையும் ஏற்படுத்துவதற்கு துணைபுரியலாம்".

இதன் அடிப்படையில் பதவிக்கு வந்து சில வாரங்களிலேயே அரசாங்கம் நியாயமானதும் கௌரவமானதுமான சமாதானத்தை எய்தமுடியும் என்னும் எதிர்பார்ப்பின் கீழ் எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்துடன் சம்வாதமொன்றை ஆரம்பித்தது. அதன் பின்னர் 1995 சனவரி மாதத்தில் மோதல்தவிர்ப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது எல்.ரீ.ரீ.ஈ.இயக்கத்தினர் அரசியல் தீர்வொன்றை அல்லது அரசாங்கத்தினால் முன்வைக்கப்படவிருந்த இணக்கமெதனையும் ஆராய்வதற்கு விடாப்பிடியாக மறுத்து வந்தனர். அரசாங்கத்தின் சமாதான முயற்சி சகல நேரங்களிலும் திறந்த உள்ளத்துடனும் நல்லெண்ணத்துடனும் மேற்கொள்ளப்பட்ட அதே நேரத்தில் எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தினர் யதார்த்தத்துக்கு மாறான கோரிக்கைகளை விடுத்தவண்ணம் இருந்தனர். தம் செயல்கள் சரியானவை என்ற எண்ணத்தில் அரசாங்கம் அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. வடக்கில் உள்ள சாதாரண மக்கள் பட்ட

துயரங்களை ஒருவாறு ஒழிப்பதற்கு ஏதுவான சில நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தது. உதாரணமாக, நாங்கள், சில நுகர்வுப் பொருள்களைக் கொண்டுசெல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளையும் மீன்பிடிப்புக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளையும் அகற்றி யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த மூலவசதிகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தோம். அத்துடன், யுத்த நடவடிக்கைகள் காரணமாக மூடப்பட்டிருந்த அணுகுப் பாதைகளையும் திறந்துவிட்டோம். ஆனால் எல். ரீ. ரீ. ஈ. இயக்கம் இதற்கு தக்கவாறு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், 1995, ஏப்பிரல் மாதம் 19 ஆந் திகதி மேற்கொண்ட தாக்குதல் காரணமாக மோதல் தவிர்ப்பு இரத்தாகியது. இந்த யுத்தத்தை மீண்டும் தொடர்ந்ததன் காரணமாக ஏற்பட்ட அழிவினைத் தருகின்ற விளைவுகளை முழுநாடும் தாங்கிக்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டது. எவ்வாறாயினும், இலங்கை மக்களுக்கு அரசியல் யோசனைகளை அரசாங்கம் முன்வைப்பதற்கு இது தடையாக இருக்கவில்லை. ஆகஸ்ட் மாதம் 03 ஆந் திகதியன்று அரசாங்கம் அதிகாரப்பரவலாக்கல்பற்றிய யோசனைகளை நாட்டு மக்களுக்குச் சமர்ப்பித்தது. பொதுமக்களிடமிருந்தும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் அரசாங்கத்தின் யோசனைகளுக்கு விரிவான பிரசாரம் அளிக்கப்பட்டது.

முழு முயற்சிக்கும் ஆதாரமாகவுள்ள யோசனைகளின் அடிநாதமாக நாட்டின் ஐக்கியத்தினையும், ஆள்புல ஒருமையினையும் இறைமையினையும் பாதுகாக்கும் அதே நேரத்தில் பிராந்தியங்களுக்கு மிக விரிவான அதிகாரப்பரவலாக்கலை ஏற்படுத்தல் அமைகின்றது.

அதிகாரத்தை மாத்திரமே அரசாங்கம் பிரித்தளிக்க அல்லது பகிர்ந்துகொள்ள கருதுகின்றதென்பதை வற்புறுத்திக்கூறுதல் வேண்டும். இந்த அரசாங்கம் நாட்டைப் பிரிப்பதற்கு ஒருபோதும் இசையமாட்டாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதே இந்த யோசனைகளின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். எவ்வாறாயினும் அதனைவிட மிக விரிந்த குறிக்கோளும் எய்தப்படுவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. இலங்கையர்கள் அனைவரும் அவர்கள் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் தமது வருங்காலம் சம்பந்தமாக தீர்மானங்களை எடுக்கக்கூடிய அதிகாரத்தைப் பரவலாக்குதலே அந்த விரிவான நோக்கமாகும். ஆட்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானித்துக்கொள்ள வழிவகுக்கும் உள்ளூர் பிரதிநிதித்துவக்கூறுகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளுவதன் மூலம் சனநாயக இலட்சியத்தை நன்கனம் பேணிக்காக்கலாம் என நாங்கள் கருதுகின்றோம்.

உத்தேச அரசியலைப்பின் ஓர் அத்தியாயமாக அமையும் சட்டமுறை யான ஆவணமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த யோசனைகள் இலங்கை யின் ஐக்கியத்தினையும் இறைமையினையும் போதுமான அளவில் பாதுகாக்கின்றன. அதே நேரத்தில் அவை அதிகாரத்தை யதார்த்த பூர்வமான அளவில் பரவலாக்கல் செய்வதற்கும் துணைபுரிகின்றன. அடுத்தபடியாக, அரசியல் சீர்திருத்தம் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழுவால் இந்த சட்டநகல் ஆராயப்பட உள்ளது. தெரிவுக்குழுவின் பொதுவிணக்கத்தைப் பெற்று பாராளுமன்றத்தில் 2/3 பங்கு உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அவை பொது மக்களது அங்கீகாரத்தைப் பெறும்படி மக்கள் தீர்ப்பொன்றுக்கு விடப்படும். அதிகாரப்பரவலாக்கத்துக்கான உத்தேச அரசியலமைப்புத் திட்டத்தின் இறுதியான நடுவர்களாக பொதுமக்கள் இருக்க வேண்டு மெனக் கருதுகின்றோம். இந்த அரசாங்கம் தம்மை மக்கள் அரசாங்கமாக கருதுகின்றதுடன் இலங்கையர்கள் அனைவரினதும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும், அபிலாசைகளுக்கு ஏற்பவும் எப்போதும் நாட்டை ஆண்டுவந்துள்ளதுடன் வருங்காலத்திலும் அங்ஙனம் நாட்டை ஆளும்.

எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தினர் செய்துவருகின்ற அட்டூழியங்களுக்கும் நெறிதவறுகைகளுக்கும் இரண்டு முக்கிய நோக்கங்கள் உள்ளன:

- அரசாங்கம் அரசியல் தீர்வினை முன்னெடுத்துச் செல்வதற்கு இடர்களை ஏற்படுத்தும்பொருட்டு சமாதானச் செயல்முறையைத் தடம்புரளச் செய்தலும் இனப்பகைமையையும் அவநம்பிக்கை யையும் தீவிரமாக்குதலும்.

- எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தினருக்கு எதிரான இராணுவத் தாக்குதல் களிலிருந்து இராணுவத்தினரைத் திசைதிருப்புதலும் அதன் மூலம் எல்.ரீ. ரீ. ஈ. யினருக்கு ஏற்படப்போகும் நிச்சயமான தோல்வியைத் தாமதித்தலும்.

வடக்கிலும் கிழக்கிலும் சமாதானமும் சனநாயகமும் வெற்றியுடன் நிலவச் செய்வதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. அரசாங்கம் மேற்கொண்டுள்ள சமாதான நாட்டத்துக்கு இந்த நாட்டு மக்கள் தொடர்ந்தும் ஆதரவு அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. எமது நாட்டில் சகல இனத்தவர்களும் ஐக்கியமாகவும் சமமாகவும் சகோதரர்களாகவும் ஒன்றுபட்டு வாழக்கூடிய சூழல் ஏற்பட வேண்டும் என நாங்கள் கருதுகின்றோம். எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தினரது கொடூர மான சூழ்ச்சிகளில் அரசாங்கம் விழமாட்டாது. எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தினர் எம்மை அழைத்துச் செல்ல விரும்புகின்ற அழிவுப் பாதையில் செல்லாமல் இருப்பதற்கு நாங்கள் அனைவரும் திடசங்கற்பம் கொள்ளல் வேண்டும்.

பயங்கரவாதத்தை இராணுவ நடவடிக்கைகளின்மூலம் ஒழிக்க முடியுமெனினும் இனப்பிரச்சினையை அங்ஙனம் ஒழிக்கமுடியாதென் பதை நான் வற்புறுத்திக் கூறுகின்றேன். சிறுபான்மையின மக்களது சமூக. பொருளாதார. அரசியல் பிரச்சினைகள் கலந்துரையாடல் மூலமாகவும் அரசியல் தீர்வுகளின் மூலமாகவும் மட்டுமே நிரந்தரமாகத் தீர்க்கப்படலாம்.

### அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள்

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைள் முன்னர் பல சந்தர்ப்பங்களில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருந்தன. இந்தச் சபையில் நான் செய்த எனது முதலாவது கொள்கைப் பிரகடனத்தில் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளைச் சார்ந்த துணையாதரவான கொள்கைகளுடன் கூடிய எட்டு அமிச நிகழ்ச்சித்திட்ட உருவத்தில் அமைந்த விரிவான கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது.

1995. 1996 ஆகிய ஆண்டுகளில் அடுத்தடுத்துச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க வரவு செலவுத் திட்டங்கள் அரசாங்கத்தின் பொருளாதாரத் திறமுறையின் செயற்படுத்துகைக்கான பிரதான கருவிகளாக அமைந்தன. அரசாங்கம் பதவிக்கு வந்த முதலாவது ஆண்டுகாலத்துக்குரிய பொருளாதாரச் செயல்நிறைவேற்றுகை பற்றிய முன்னேற்ற அறிக்கையொன்று. "வருங்காலத்துக்கு அடித்தளம் அமைத்தல்: அரசாங்கத்தின் பொருளாதார அறிக்கை 1994 - 1995" என்ற தலைப் பைக் கொண்ட ஆவணத்தின் மூலம் ஏலவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உறுதியான பெரும்பரிமாண பொருளியல் மற்றும் நிதிக் கட்டமைப்பொன்றை தாபிப்பது எமது கொள்கையாக இருக்குமென நான் குறிப்பிட்டு இருந்தேன். அந்தப் பொருளாதாரக் கட்டமைப்பின் கீழ் அனைவருக்கும் நியாயமானதும் ஒப்புரவானதுமான பயனைத் தருகின்ற விரைவானதும் நிலைபேறுடையதுமான அபிவிருத்தி ஏற்படப் போகின்றது என்பதையும் குறிப்பிட்டு இருந்தேன்.

இந்தக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும்பொருட்டு பொருளாதார முறையிலும் அதன் இயக்கப்பாட்டு முறைகளிலும் அடிப்படையான மாற்றங்களை எனது அரசாங்கம் செயற்படுத்தி உள்ளது.

நீண்டகால. இடைக்கால. குறுகியகால முன்னுரிமைகளுடன் ஒத்திசை வான பொருளாதார அபிவிருத்தித் திறமுறையொன்று உருவாக்கப் பட்டுள்ளது.

இந்தப் பொருளாதார அபிவிருத்தித் திறமுறையானது தேசிய முன்னுரிமைகளின் அடிப்படையிலும் பொது நலனார்வத்தின் அடிப்படையிலும் வகுக்கப்பட்டு உள்ளது. அதிகாரத்திலுள்ள சில ஆட்களுடைய அக்கறை நலன்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி இது உருவாகக்கப்படவில்லை.எமது அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்தும் பணி யுத்தம் புரிவதால் இடைநிறுத்தப் படமாட்டாது.

பொருளாதார வளர்ச்சியின் பிரதான இயந்திரமாக தனியார்துறை விளங்கக் கூடியவாறு சந்தைக்கு இதமான கொள்கைகளை பின்பற்றுவதில் எமக்குள்ள ஈடுபாட்டினைப் புதுப்பித்துக்கொள்ளும் அதேவேளையில் விரைவான அபிவிருத்தியை ஏற்படுத்தும் பணிக்கு தனியார்துறையினரை ஊக்குவிக்கின்ற வழிவகைகளை முன்னரைவிட மிகுந்த செயலூக்கத்துடன் நாங்கள் கடைப்பிடித்து வருகின்றோம். அது அங்ஙனமிருப்பினும் சந்தைகள் இனிது இயங்காத துறைகளில் சந்தை இயந்திரத்தை வலுவூட்டி அதன் குறைகளை நிரப்பும் முக்கிய பணியானது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் உணரப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் பிரதானமாக, தனியார் துறையினரிடம் ஒப்படைக்கப்பட முடியாத அளவில் அமைந்த முதனிலை மற்றும் இடைநிலைக்கல்வி, தடுப்பு நிலைச் சுகாதாரம், வறுமைத் தணிப்பு, சூழல் பாதுகாப்பு, மூலவமைப்பு வசதிகளின் அபிவிருத்தி முதலிய மனித அபிவிருத்தி செலவினத்துறையை சார்ந்துள்ளன.

விரைவானதும் நிலைபேறுடையதுமான பொருளாதார வளர்ச்சி வீதமொன்றினை எய்தவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும் வறுமையினை ஒழிக்கவும் வாழ்க்கைச் செலவினைக் குறைக்கவும் வகுக்கப்பட்ட எமது அபிவிருத்தித் திறமுறையின் முக்கிய அமிசங்களாக ஒவ்வொன்றுடன் சேர்ந்து வலுவினைப் பெறுகின்ற பல கூறுகள் உள்ளன.

- சிக்கனமான நிதிக்கொள்கை நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் அரசாங்கத்தின் செலவினத்தைக் குறைப்பதன் மூலமும் உறுதியான பெரும்பரிமாண பொருளாதாரத் சூழ்நிலைகளை உருவாக்குதல்.

- ஏற்றுமதிகளையும் போட்டிகரமான இறக்குமதிப் பதிலீட்டு கைத்தொழில்களையும் சேவைகளையும் ஆதரிப்பதற்கு ஏதுவான சூழல்களை ஏற்படுத்தும்பொருட்டு சுங்கவரிகளை சிக்கனமாக ஒழுங்குறுத்துகையும் தாராளமயமான வர்த்தகமொன்றையும் கொடுப்பனவாட்சியொன்றையும் உருவாக்குதலும்.

- வறிய தாழ்ந்த வருமானத்தைப் பெறுகின்ற குடும்பங்களுக்கு வருமானம்போய்ச்சேருவதை மேம்படுத்தவும் அக்குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் நிலையானதும் வருமானத்தை உழைக்கின்றதுமான செயற்பாடுகளில் பங்குபற்றுவதை ஊக்குவிப்பதற்கும் பயனுறுதி வாய்ந்த சமூக பாதுகாப்பு வலையொன்றை ஏற்பாடு செய்யும்நோக்கில் நலத்துறை செலவின நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்துதல்.

- உற்பத்திகளைக் கொணருகின்ற முதலீடுகளுக்கு வளங்களைத் திரட்டும் நோக்கில் வங்கி நிறுவனங்களுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் வலுவூட்டுதலும் மூலதனச் சந்தைகளை விரிவாக்குதலும்.

- தெரிவு செய்யப்பட்ட ஆதாரவமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு வேண்டிய மூலதனத்தையும் தொழில்நுட்பத்தையும் முகாமிப்புத் தேர்ச்சிகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு பொது தொழில்முயற்சி சார்ந்த சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.

- கல்வி, சுகாதாரம், தேர்ச்சிகளின் அபிவிருத்தி, கமத்தொழில், நீர்ப்பாசனம், கிராம அபிவிருத்தி, சூழலியல், ஆதாரவமைப்பு வசதிகள் ஆகியவற்றுக்கான மூலதன முதலீடுகளை அதிகரிக்கும்பொருட்டு பொது முதலீட்டுத் திறமுறையை மீளமைத்தல்.

## கட்டமைப்புப் பலவீனங்கள்

மக்கள் முன்னணி அரசாங்கமானது கட்டமைப்பு முறையாக மெலிந்த ஒரு பொருளாதாரத்தையே அதன் பாரம்பரிய சொத்தாகப் பெற்றுள்ளது. 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற தொடக்கநிலைக் கால மீட்பின்போது எய்தப்பெற்ற அதியுயர் வளர்ச்சி ஏறத்தாழ 6-8 சதவீதமாக இருந்தது. அதனைத் தொடர்ந்து நீண்டகாலம் வைத்துக்கொள்ள முடியாது போயிற்று. அது முறைமையாக 1987 ஆம் ஆண்டுவாக்கில் 1.5 சதவீதமாகக் குறைந்து காணப்பட்டது. அதன்பின்னர் ஒருசில ஆண்டுகள் புறநீங்கலாக பொருளியல் வளர்ச்சி 5 சதவீதத்துக்குக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. எமது முதுகெலும்பாகத் திகழும் கமத்தொழில்துறை 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னைய காலப்பகுதி முழுவதும் 2.7 சதவீத சராசரி வளர்ச்சியுடன் பின்தங்கி இருக்கலாயிற்று. சாதகமான புறத்தை எடுத்து நோக்கும்போது பொருளாதாரத்தின் தெரிந்தெடுத்த துறைகளை கைத்தொழில் ஏற்றுமதிகளிலும் அதிகரித்துக் காணப்பட்டதுடன்

தனியார்துறை முதலீடுகளிலும் ஒரளவு உயர்ந்த நிலை காணப்பட்டது. இது எப்படியிருப்பினும் பாதுகாப்புப் பெற்ற வெளிநாட்டுச் சந்தைகளில் தங்கியுள்ளனவும் புவியியல்ரீதியாக சில இடங்களில் அமைந்துள்ளனவும் பொருளாதாரத்தின் மட்டுப்படுத்தப்பட்ட துறைகளில் இடம்பெற்றனவுமான கைத்தொழில் முயற்சிகளின் மிகைச்செறிவு காரணமாக கட்டமைப்புரீதியான சமமின்மைகள் தோன்றியுள்ளன.

1986 இல் அரசாங்க முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15 சதவீதத்திலிருந்து 1994 இல் 7 சதவீதமாக உறுதியாகக் குறைந்து வந்துள்ளது. கல்வி, சுகாதாரம் மீதான செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1970 களில் முறை யே 4 சதவீதத்திலிருந்தும் 2 சதவீதத்திலிருந்தும் 1994 இல் முறையே 3 சதவீதத்துக்கும் 1.4 சதவீதத்துக்கும் வீழ்வு கண்டுள்ளது. பெருந்தோட்டத்துறை, போக்குவரத்து, மின்வலு, சக்தி, தொலைத் தொடர்புகள், துறைமுகங்கள் போன்ற மிக முக்கிய துறைகளிலான முதலீடுகள் பல வருடங்களாக அசட்டை செய்யப்பட்டு வந்துள்ளன. கடந்த 5 வருடங்களாக இத்துறைகளிலான அரசாங்க முதலீடு எதுவும் இருந்திருக்கவில்லை. பணவீக்கமானது சில வருடங்களில் 20 சதவீதத்தை எட்டி ஏறத்தாழ 13 சதவீதத்தில் இரட்டையிலக்க வீச்சில் சராசரியாக இருந்துள்ளது. பொருளியல் முகாமையில் இது அடிப்படை மெலிவைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 13 சதவீத அளவிலமைந்த பெரிய பிசுக்கால் துறைகள்மூலம் தீவிரமடைந்துள்ளது. 1995 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 1 சதவீதமாக இறந்த பாதுகாப்புச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கிட்டத்தட்ட 5 சதவீதத்தை எட்டியுள்ளது. இது அரசாங்கச் செலவினத்தின் கிட்டத்தட்ட 15 சதவீதத்தை எடுத்துள்ளது. கடன்வழங்குவதன்மூலம் நிதியளிக்கப்பெற்று வந்த அடுத்தடுத்து இடம்பெற்றமிக உயர்ந்த குறைகள் அரசாங்கக்கடனை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 95 சதவீதத்துக்கு உயர்த்தியுள்ளது. நடைமுறைச் செலவினத்தின் ஏறத்தாழ 30 சதவீதம் அரசாங்கக் கடனின்மீதான வட்டிக் கொடுப்பனவுகளின் மீது செலவிடப்பட்டுள்ளது. இதுவும் பாதுகாப்புச் செலவினமும் ஒன்றுசேர்ந்து அரசாங்க வருமானத்தின் அரைவாசிக்கு மேல் திரளலாயிற்று. மிகமிக அத்தியாவசிய தேவையாக உள்ள அபிவிருத்தி முயற்சிகளை மேற் கொள்வதிலிருந்து இது அரசாங்கத்தைத் தடுத்துள்ளது.

சாதனைகள்

இந்தப் பின்னணியில் எமது உடனடிச் சிறப்புப் பணியாக இருப்பது எமது பொருளாதாரத்தை ஒழுங்குறுத்தி திடப்படுத்தி உற்பத்தி வீழ்ச்சியிலிருந்தும் பணவீக்க உயர்விலிருந்தம் வறுமை, வேலைவாய்ப் பின்மை ஆகியவை தீவிரமடைவதிலிருந்தும் பாதுகாப்பதாகும். நாம் நடுத்தரக்கால பிசுக்கால் திரட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்றைக் கைக்கொள்ளுவதன்மூலம் உடனடியான பிசுக்கால் பிரச்சினைகளை விரைந்து கையாண்டுள்ளோம். பாதுகாப்பு, அகதிகள், அரசாங்கக் கடன்கள்மீதான வட்டிக்கொடுப்பனவுகள் போன்றவைமீது பாரிய செலவீடுகள் இருந்தபோதிலும் நாம் 1995 இல் வரவுசெலவுத்திட்டக் குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 9 சதவீதமாக இருக்கத்தக்க வகையில் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தயுள்ளோம். இது 1994 இல் 10 சதவீதமாக இருந்தது. பாதுகாப்புச் செலவினத்தில் அதிகரிப்பு இல்லாதிருந்தால் நாம் வரவுசெலவுத்திட்டக் குறையை 1995 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8 சதவீதத்துக்கும் குறைவாகக் கட்டுப்படுத்தி இருக்கமுடியும்.

பாதுகாப்புமீதும் மிக அவசர தேவையாகவுள்ள புனரமைப்பு, புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின்மீதுமான பெருந்தொகையான செலவினம் பிசுக்கால் குறையை மேலும் குறைப்பதைக் கடினமாக்குகின்ற போதிலும் அது அரசாங்க வருவாய் செலவினங்களில் உள்ள கட்டமைப்புரீதியான மெலிவுகளுக்குக் கவனத்தைச் செலுத்தும் இரு நிகழ்ச்சித்திட்டத்தினுடாக முன்னுரிமைக்கவனத்தைப் பெறும்.

நாம் பல நடவடிக்கைகளினுடாகப் பணவீக்கத்தையும் வெற்றிகரமாகக் குறைத்துள்ளோம். சராசரி வருடாந்தப் பணவீக்கம் 1995 ஆம் ஆண்டில் சுமார் 13 வீதத்திலிருந்து சமார் 8 சதவீதம்வரை குறைக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 1995 யூன் மாதம்வரை பணவீக்கம் படிப்படியாக குறைவுற்று வந்தது. அந்த மாதத்தில் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம். அணித்தான மாதங்களில் சில நுகர்வுப் பண்டங்களின் விலைகள், யுத்தம் தொடர்வது காரணமாகவும், சர்வதேச சந்தைகளில் பண்டங்களின் விலை அதிகரித்துள்ளதன் காரணமாகவும் அதிகரித்த உற்பத்திக் கிரயம் காரணமாகவும் சந்தைகளில் நிலவுகின்ற குறைபாடுகள் காரண மாகவும் அதிகரிக்கத் தொடங்கின. எனவை, நாம் இதுகாறும் பெற்றுள்ள வெற்றிகளை உறுதிப்படுத்துவதற்கு பல துறைகளில் எமது முயற்சிகளை மேலும் அதிகரிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

யுத்தநிலையின் கீழும் நியாயமான விலைகளில் பண்டங்களை இடையறாது வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். வடக்குக்கும் கிழக்குக்கும் அனுப்பப்படும் அத்தியாவசி நுகர்வுப்பொருள்கள் தடையின்றி அனுப்பப்படுகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் பண்டங்களைச் சில்லறையாக விற்பனை செய்யும் உரிமையினைக் கூட்டுறவு மற்றும் தனியார்துறையினர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய கூ. மொ. வி. உரிமைபெற்ற கடைகள் திட்டமொன்று அகில இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் விரிவான சில்லறை விற்பனைச் சந்தையில் பண்டங்களை எளிதில் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அவை ஏகபோக வாணிபத்தின்மீதும் சந்தை பூரணத்துவமின்மைகளின்மீதும் கட்டுப்பாட்டைச் செலுத்துவனவாகியுள்ளன. மேலும் அரசாங்கம் தாராள இறக்குமதி உத்தரவுப்பத்திரம் வழங்கும் முறையினூடாக அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதி வர்த்தகத்தின் ஏகபோக உரிமையை உடைத்தெறிந்துள்ளது. இது வணிகர்களிடையே வரவேற்க முடியாததொன்றாக இருக்கின்ற போதிலும் நுகர்வோரின் நலனை மேம்படுத்துவதற்குத் தேவையான சந்தைப் போட்டியைத் தீவிரப்படுத்த உதவியுள்ளது. சுங்கத்தீர்வை முறி முறைமைகளினூடாக போதுமான அளவு உணவுப் பொருள்களின் இருப்பு. பேணப்படுத்துகின்றது. இது வழங்கல் ஒழுங்குறுத்தப்படுவதையும் விலைகள் ஸ்திரப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்தும்.

உள்நாட்டு வெளிநாட்டு நிலைமைகளில் பல பாதகமான சூழ்நிலைகள் இருந்த போதிலும் 1995 இல் ஏறத்தாழ 5.5 சதவீத பொருளியல் வளர்ச்சி பேணப்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகள் 15 சதவீத வளர்ச்சியைக் கண்டிருந்து அதே வேளையில் கைத்தொழில்துளை ஒட்டுமொத்தமாக 7 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது. வெளிநாட்டு நடைமுறைக் கணக்குக் குறை மொத்த அபிவிருத்தி உற்பத்தியின் 6.5 சதவீதத்துக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. அத்துடன் வெளிநாட்டுச் சொத்து. பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட இறக்குமதிகள் பெருமளவு அதிகரித்து இருந்த போதிலும் ஏறத்தாழ 2.1 பில்லியன் யு. எஸ். டொலர் மட்டத்தில் பேணப்பட்டது.

## ஆதரவுக் கொள்கை முறைமை

எனது முன்னைய இரண்டு கொள்கைக் கூற்றுக்களும் அடுத்தடுத்த அரசாங்க வரவு செலவுத் திட்டங்களும் தனியார்துறை வழிப்பட்ட அபிவிருத்திக்கு மேலும் ஆதரவு அளிக்கும்வகையில் நிகழ்விலுள்ள வரி. இறுப்பு அமைப்பில் முக்கிய மாற்றத்துறைகளை சுட்டிக்காட்டி உள்ளன. போட்டியை ஊக்குவிக்கும் நோக்கிலும் நுகர்வோர். முதலீட்டாளர்கள் ஆகிய இருசாராருக்கும் நன்மையளிப்பதற்காகவும் இறுப்புமுறை

சிக்கனமாக ஒழுங்குறுத்தப்பட்டதுடன் வீதங்களும் குறைக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் அதன் 1996 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ஆள்சார், கூட்டுவரி விதிப்பைத் தழுவும்வகையில் அகல்விரிவான யோசனைகளின் தொகுதியை அறிமுகம் செய்துள்ளது.

வருமான வரி 35 சதவீதத்துக்குச் குறைக்கப்பட்டதுடன் வரியற்ற வருமான தொடக்க எல்லையும் உயர்த்தப்பட்டது.

சுங்க இறுப்புகள், உச்ச இறுப்பு 35 சதவீதமாக இருக்கும்வகையில் மூன்று நியம வீத அமைப்பில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

நிமித்த சலுகைகளும் மிகை விதிப்புகளும் அகற்றப்பட்டுள்ளன. மேலும், உயர்ந்து செல்லும் வருமான வரிகள், சுங்க இறுப்புகள் தொடர்பான சீர்திருத்தங்கள் கட்டம் கட்டமான விதத்தில் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

சுங்க நிருவாகம் மீள அமைக்கப்படும். அத்துடன், ஏற்றுமதி இறக்குமதிகளுக்கான சுங்க நடைமுறைகள், உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குப் பாதகமான ஒழுகல்களைத் தடுத்து வர்த்தகத்துக்கு உதவுவதற்கென அமைக்கப்பட்ட கப்பலில் அனுப்புவதற்கு முன்பாக சோதனைத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதினூடாக ஒழுங்குறுத் தப்பட்டுள்ளன.

தற்போதுள்ள மொத்த விற்பனை வரிமுறையை பொருள், சேவை, வரி முறையினால் பதிலீடு செய்வதற்கான திட்டமிடல் வேலைகளும் தயார்படுத்தும் வேலைகளும் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இந்த ஆண்டின் மத்தியவாக்கில் அது நடைபெறும். இது வரி நிருவாகத்தை மேம்படுத்துவதுடன் சிநேகபூர்வ முதலீட்டு வரிமுறையொன்று உருவாக்கும். பொருள், சேவை, வரி செயற்படுத் துவதையடுத்து நாட்டுப்பொருள் வரி, சுங்க இறுப்பு முறையில் மேலும் எளிதாக்கம் இடம்பெறும். உள்ளூர் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் நாட்டுப்பொருள் வரி முறைமை எளிதாக்கப்பட்டுள்ளது.

நிதித்துறையில், சந்தைப்போட்டிச் சவால்களுக்கு தற்போதுள்ள சட்டவாக்கத்தை வலுப்படுத்தும்நோக்கில் பல திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இரண்டு அரச வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் அவற்றின் நிதி வலிமையை மேம்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் எழவுள்ள போட்டி வங்கித்தொழில் சூழ்நிலையில் பயனுறுதியுடன் போட்டியிடுவதற்கு உதவும்வகையிலும் இவ்வாண்டில் மறுமூலதனப் படுத்தப்படும்.

ஒழிவுமறைவின்மை, வினைத்திறமை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கத் தொழில்முயற்சிச் சீர்திருத்தங்கள் மேற்கொள் ளப்படுகின்றன. இது முன்னைய ஆட்சியாளர்கள் பின்பற்றிய முறைக்கு நேர்மாறானது. அரசாங்கம் வெளிநாட்டு மூலதனம், தொழில்நுட்பவியல் முகாமைத் திறமைகளைக் கவரும் வகையில் கொழும்பு காஸ் கம்பனி போன்ற சில வர்த்தகத் தொழில் முயற்சிகளின் உரிமைநீக்கல் வேலைகளை ஏற்கனவே பூர்த்தி செய்துள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் ஒவ்வொரு 3 பில்லியன் ரூபாவில் வரவுசெலவுத் திட்ட நோக்கத்துக்கான மொத்த வருவாய்வீதம் இதுவரையில் 4.8 மில்லியன் ரூபாவாகும். இதற்கு மேலாக ஏற்கனவே தனியார் மயப்படுத்தப்பட்ட கொழும்பு காஸ் கம்பனிமூலம் 40 மில்லியன் யூ. எஸ். டொலர் முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எயார் லங்கா. ஸ்ரீ லங்கா ரெலிகொம், லங்கா எலெக்றிக் கம்பனி போன்ற பல முக்கிய தொழில்முயற்சிகள் அவற்றின் முதலீடுகளை அதிகரிப்பதற்கு மீள அமைக்கப்பட்டுள்ளன. அரசாங்கத் தொழில்முயற்சி சீர்திருத்த ஆணைக்குழுவானது (பேர்க்), முன்னைய அரசாங்கத்தினால் பல ஊழல்கள் ஒழுங்கீனங்களுடன் தனியார்மயப் படுத்தப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகள் அடங்கலான தொழில்முயற்சிகளின் சிலவற்றை மீள அமைக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

## கைத்தொழில் அபிவிருத்தி

புடவைகளைப் போன்ற தொழில் செறிவார்ந்த உற்பத்திகளின் ஓர் வரையறைக்குட்பட்ட எல்லையின்மீது அதிகளவில் தங்கியிருப்பது எமது கைத்தொழில் பொருளாதாரத்தின் பலவீனமாகும். 1996 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அதிக பெருமானம் சேர்க்கப்பட்ட உயர்தொழில் நுட்பக் கைத்தொழில்களை நோக்கி பொருளாதாரத்தைப் பல்வகைப்படுத்து வதற்கு ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. அது அப்போது முதலீட்டுச் சபையால் வழங்கப்பட்டிருந்த ஊக்குவிப்பு பொதியத்துக்குப் பெரிய அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொள்ளும் முதலீட்டாளர்களையும் ஏற்றுமதி நெறிப்பட்ட கம்பனிகளையும் ஈர்க்கும்வகையில் பல புதிய ஊக்குவிப்புகளையும் அறிமுகப்படுத்தியது. இந்த யோசனைகளை மீண்டும் எடுத்துரைக்கும் தேவை இப்பொழுது எழமாட்டாது. ஆனால் இவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் அனுபவத்தின் அடிப்படையில் அவற்றின் பயனுறுதிவாய்ந்த தன்மையினை உயர்த்துவதற்கு வேண்டிய திருத்தங்கள் கடந்த காலம் அளாவியதாக அறிமுகப்படுத்தப்படும்.

இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு புதிய வேகத்துடன் பொருளாதார அபிவிருத்திக்குத் தனியார்த்துறையினர் பங்களிப்பார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். பின்வருவன முதன்மை அளிக்கப்பட வேண்டிய துறைகளாக இனங்காணப்பட்டுள்ளன:

கமத்தொழில், பெருந்தோட்டங்களின் பல்வகைப்படுத்துகை, தோல் மற்றும் இறப்பர் கைத்தொழில்கள், பீங்கான் மற்றும் அல்-உலோக கனிப்பொருள் கைத்தொழில்கள், தேர்ச்சிகளின் அடிப்படையிலான மற்றும் தகவல்செறிவு கொண்ட கைத்தொழில்கள், உல்லாசப் பயணத்துறை, இலகு எந்திரவியல் மற்றும் இலத்திரனியல் கைத்தொழில்கள்.

4 சுதந்திரவர்த்தக வலயங்களுக்கு மேலதிகமாக நாடெங்கிலும் பல கைத்தொழில் பூங்காக்கள் தாபிக்கப்பட்டு வருகின்றன. உள்ளூரிலே நடுத்தர மற்றும் சிறுபரிமான கைத்தொழில்களும், கிராமக் கைத்தொழில்களும் இனிது இயங்கக்கூடிய சூழ்நிலை இப்பூங்காக்கள் உருவாக்கும்.

*கைத்தொழில் உறவுகள்*

நாட்டின் முதலீட்டுச் சூழலினை மேம்படுத்துவதற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அமிசமாகக் கைத்தொழில் உறவுகள் இனிது இயங்குகின்ற முறைமை ஒன்றை ஏற்படுத்துதல் அமைகின்றது. இது தொடர்பாக சந்தைகளுக்கு இதமான சூழல் ஒன்றில் வளர்ச்சியினையும் பணியமர்த்துகையினையும் ஆதரிக்கும் பொருட்டுப் பணிகொள்வோர்களும் பணியாளர்களும் அரசாங்கத்துடன் பயன்மிக்க பங்காளர்களாக இயங்கக்கூடிய பொருத்தமான நிறுவன அமைப்புகளைத் தாபிப்பது அவசியமாகும். தேசிய அபிவிருத்தி மன்றம் சனவரி 24 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக நிறுவப்பட்டது. பொருளாதாரத்தில் மிகப்பெரிய வளர்ச்சிக்கு உதவும் வகையில் தேசிய பொருளாதாரக் கொள்கைக்கான விதப்புரைகளைச் செய்வது இந்த மன்றத்தின் கடமையாகும். அப்பணிகளில் அக்கறை கொண்டவர்களது அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்ளுதலும் அதன் விசேடக் கடமைகளில் ஒன்றாகும். இது தொடர்பாக, அரசாங்கத்துக்கும் பணிகொள்வோர்களுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளின் போது தொழிலாளர்களும் பிரதிநிதித்துவத்தைப் பெறுமாறு தேசிய அபிவிருத்தி மன்றம் அதன் பணிகளை ஒழுங்கு செய்துள்ளது. தேசிய அபிவிருத்தி மன்றத்துக்குச் சமாந்தரமாக, தேசிய அபிவிருத்தி மன்றத்தின் முக்கிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டுப் பணியமர்த்துகைக் கொள்கைகள், திறமுறைகள் பற்றிய சனாதிபதி செயலணிக் குழுவொன்றையும் நான் நிறுவியுள்ளேன்.

ஒருபுறம் விளைவுப்பெருக்கத்தை அதிகரிக்கும் பொருட்டு கைத் தொழில் உறவுகளைச் சீரமைத்தல் அவசியமாக இருக்கும் அதே நேரத்தில் மறுபுறத்தில் வேலை நியதிகளையும் நிபந்தனைகளையும் பேரம் பேசுவதற்குப் பணியாளர்களுக்கு உள்ள அடிப்படை உரிமைகளும் பேணப்படுதல் வேண்டும். பணியமர்த்துகை பெற்றுள்ள பணியாளர்களது அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் கடப்பாடு எம்மிடம் சுமத்தப்பட்டுள்ளது. அதேபோன்று எந்தத் தொழிலிலும் அமர்த்தப்படாத பணியாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும் எமது கடமை என்பதை நான் இங்கு வழியுறுத்திக் கூறுகின்றேன். அங்ஙனம் செய்யாவிடின் தொழில் இல்லாதவர்கள் எமது சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே இருப்பர்.

தொழில் சந்தையிலும் அத்துடன் தொடர்புகொண்ட கொள்கைகளிலும் நிலவுகின்ற தவிர்க்கக்கூடிய இறுக்கல் நிலைகளைச் சமாளிக்கும் வகையில் எமது பணி அமர்த்துகைக் கொள்கைகளும் திறமைகளும் ஆக்கப்பட்டுள்ளன. தொழிற்சங்கப்பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் ஒரு சூழலில் தொழிற்சங்கங்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலின் பயனாக உள்நாட்டையும் வெளிநாடுகளையும் சேர்ந்த பணிகொள்வோர்களுக்கும் பணியாளர்கள் அனைவருக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வும் பொதுப்படையான ஒப்புக்கோடலும் ஏற்படுமென நான் எதிர்பார்க்கின்றேன்.

### ஆதாரவமைப்புக்களின் அபிவிருத்தி

எனது முன்னைய கொள்கைப் பிரகடனத்தில் முக்கியமான ஆதாரவமைப்பு சேவைகளுக்குள்ள (அவையாவன : மின்வலு, துறைமுகங்கள், தொலைத்தொடர்பு, நெடுஞ்சாலைகள்) தேவைகளுக்கும் தனியார்துறையினரது பங்களிப்பினைத் தேவைப்படுத்துகின்ற ஆதாரவமைப்பு அபிவிருத்திக்குரிய தனியார்துறை வளமூலங்களுக்கும் இடையில் சமமின்மை நிலவுவது சுட்டிக்காட்டப்பட்டது. அரசாங்கத் துறையோடு சம்பந்தப்பட்ட நிருவாகத்துக்கு இது பழக்கப்படாத விடயமாக இருக்கின்றபடியால் இதன் முன்னேற்றம் நாங்கள் எதிர்பார்ப்பதைவிட மந்தமாகவே ஏற்படுகின்றது. ஆயினும், இரண்டு ஆதாரவமைப்புக் கருத்திட்டங்கள் ஏலவே தனியார்துறையி னருடன் ஆரம்பிக்கப்படுவதற்கு கைச்சாத்திடப்பட்டுள்ளன. இரண்டு மின்வலுக் கருத்திட்டங்களும் கொழும்புத் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டமும் நிர்மானித்துச்செயற்படுத்தி, உடைமை பாராட்டுதல் (BOO)/ நிர்மானித்துச் செயற்படுத்திக் கையளித்தல் (BOT) கருத்திட்டங்களாக விரைவில் வேலைகளை ஆரம்பிக்கும். மின்சார வழங்கலை அதிகரிப்பதற்கு குறுகிய அறிவித்தல் அடிப்படையில் மின்சாரப் பிறப்பாக்கித் தொகுதிகளை இறக்குமதி செய்யும் வசதி தனியார்துறைக்கு அளிக்கப்படும்.

தொலைத்தொடர்புத்துறையில், இலங்கை தொலைத்தொடர்புச் சேவைகளுக்கு உபாயப் பங்காளியொருவரைச் சேர்த்துக்கொள்ளும் பணியினை மேற்கொள்ளும் அதேவேளையில் இந்த ஆண்டின்போது இயக்கத்துக்கு வருகின்ற சுமார் இரண்டு இலட்சம் கம்பியில்லாத உள்ளூர் கண்ணிப்பாதைகளை தனியார்துறையினர் மூலம் நிறுவச்செய்துள்ளோம். இதனைவிட ஸ்ரீ லங்கா ரெலிகொம் கம்பெனியும் மிக முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகப் பிரதேசங்களில் தற்போதுள்ள தொலைபேசிப் பாதைகளை 1,50,000 ஆல் அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்புத் துறைமுகத்தை மிகப்பெரிய பிராந்திய.நடுநாயகமான துறைமுகமாக மாற்றம்செய்வதற்கு அரசாங்கம் கொண்டுள்ள நோக்குக்கு அந்த வினைத் திறமையினை மேம்படுத்தவும் BOT அடிப்படையில் மிகப்பெரிய வெளிநாட்டு முதலீட்டினைக் கொணருகின்ற உபாயப் பங்காளி ஒருவரின் ஊடாக அதன் வசதிகளை விரிவாக்கவும் வேண்டிய சீர்திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுகாறும் நாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், தனியார்த்துறை ஆதாரவமைப்புக் கருத்திட்டங்களை விரைவாக தேர்ந்தெடுத்து அங்கீகாரம் அளிப்பதற்கு வேண்டிய நடைமுறைகளை வகுத்துக்கொள்ளவும் அதற்கான நிறுவன அமைப்பு ஒன்றை இந்த ஆண்டில் தாபிக்கவும் அரசாங்கம் கருதுகின்றது. ஆதாரவமைப்பு அபிவிருத்தி, முதலீடு செய்கைக்கான செயலகத்தை முதலீட்டுச் சபையுடன் சேர்த்துக் கொண்டமையும் தனியார்த்துறை ஆதாரவமைப்பு அபிவிருத்திக் கம்பனியை நிறவியதும் இந்தச் செயற்பாங்கில் எடுக்கப் பட்ட ஆரம்ப நடவடிக்கைகள் ஆகும். இது தொடர்பாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, "கிறெடிட்ரான்ஸ்டோல்ட் பூர் வைடேர்அவுப்போ" (கே.எவ்.டபிள்யு - கடல்கடந்த நாடுகளில் சலுகைக் கடன்வழங்கல் ஜேர்மன் நாட்டு நிறுவனம்) ஆகியவற்றின் உதவியுடன் ஆதாரவமைப்பு அபிவிருத்தித்துறையில் தனியார் முதலீடுகளை இடுவதன் பொருட்டு அரசாங்கம் ஏலவே 120 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திரட்டியுள்ளது.

### தேடிவழங்கல் நடைமுறைகள்

தேடிவழங்கல் நடைமுறைகள், அரசாங்கக்கேள்விகளைத் தழுவுகின்ற முதலீட்டுக் கருத்திட்டங்கள், நிர்மானித்து, செயற்படுத்தி, உடைமை பாராட்டுதல் (BOO) /நிர்மானித்து, செயற்படுத்தி, கையளித்தல் (BOT) யோசனைகள், கோரப்படாத யோசனைகள் ஆகியனபற்றிய புதிய வழிகாட்டிகளை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவரும். இது அரசாங்கத்துறை கருத்திட்டங்களின் செயற்படுத்துகையை விரைவுபடுத்துவதுடன் தற்போது நிலவுகின்ற பெரும் தாமதங்களையும் தவிர்க்க உதவும்.

*நீர்ப்பாசனம்*

*உள்ளூர் அதிகார சபைகளால் நிருமாணித்து பழுதுபார்க்கப்பட்ட எண்ணிறந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைத்தவிர ரூபா 267 மில்லியன் தொகையினைச் செலவழித்து 153 இடைத்தர நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள் அரசாங்கத்தினால் பூர்த்தி செய்யப்பட்டன. 1996 ஆம் ஆண்டில் அத்தகைய 254 கருத்திட்டங்களின் நிருமாண வேலையும் பழுதுபார்த்தல் வேலையும் 300 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும். 53 மில்லியன் ரூபாவைச் செலவழித்து 12 பிரதான நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டன.*

*மினப்பே/நாகதீப. வடமேல் நீர்வள அபிவிருத்தி கருத்திட்டங்களின் வேலை நடந்தேறி வருகின்றது. இவற்றுக்கான மொத்தச் செலவினம் ரூபா 750 மில்லியன்களாகும்.*

*வலு, சக்தி*

*வலு, சக்தி துறையினைப் பொறுத்தவரை, இத்துறையில் முதலீடுகளைச் செய்வதில் பல காலமாக நிலவிவருகின்ற தாமதங்கள் காரணமாகவும் வடக்கு - கிழக்கு பருவமழை பொய்த்தமை காரணமாகவும் ஏற்பட்டுள்ள வலு, சக்தி குறைவினை தவிர்த்துக்கொள்வதற்கு அரசாங்கத்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அமைச்சரவைக்கு உடனே அறிக்கை யிடும்பொருட்டு உயர்மட்ட செயலணிக்குழுவொன்று தாபிக்கப் பட்டுள்ளது. இந்தப் பற்றாக்குறையினை சமாளிப்பதற்குத் தனியார்துறையினர் தமக்கேயுரிய மின்வலு பிறப்பாக்கிகளைத் தாபிப்பதற்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கைகள் உள்ளிட்ட சக்தி சேமிக்கும் நடவடிக்கைகள் பலவும் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த பல ஆண்டுகளில் தாமதமுற்றிருந்த மின்வலுக் கருத்திட்டங்களை விரைவில் செயற் படுத்தவும் செயலணிக்குழு நடவடிக்கை எடுக்கும்.*

*பின்வரும் கருத்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன :*

*260 மெகவோட் மொத்த சக்தியினை உற்பத்தி செய்கின்ற 3 நீர் மின்வலுக் கருத்திட்டங்கள்.*

*130 மெகவோட் மின்வலுவினை உற்பத்தியாக்குகின்ற 3 வெப்ப மின்வலுக் கருத்திட்டங்கள்.*

*40 மெகவோட் ஆற்றலைக்கொண்ட 10 சிறிய நீர்மின்வலுக் கருத்திட்டங்கள்.*

*12 மெகவோட் சக்தியை உருவாக்குகின்ற காற்றுச் சக்தியால் இயங்கும் கருத்திட்டம் 1.*

*80 மெகவோட் மேலதிகச் சக்தியை வழங்கக்கூடியவாறு தற்போதுள்ள மின்வலு பொறித்தொகுதியை புனர்நிர்மாணம் செய்தல்.*

*1995 ஆம் ஆண்டில் கிராம மின்வலுப்படுத்துகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 80 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவழித்து 1,60,000 புதிய மின்னிணைப்புகள் வழங்கப்பட்டன.*

*இந்த ஆண்டின்போது 2,00,000 புதிய இணைப்புகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.*

*அநுராதபுரம், அம்பாறை, கொழும்பு ஆகிய இடங்களில் 50 மில்லியன் யு.எஸ். டொலர்களைச் செலவழித்து உப நிலையங்கள் தாபிக்கப்பட்டன.*

### நெடுஞ்சாலைகள்

*1995 ஆம் ஆண்டில் 1,00,000 கி. மீற்றர் நீளத்தைக்கொண்ட பாதைகள் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றுள், 11,000 கி. மீற்றர் நீளம்கொண்ட பிரதான வீதிகளும் 89,000 கி. மீற்றர் நீளம்கொண்ட சிறிய பாதைகளும் அமைக்கப்பட்டன. இவற்றுக்கான மொத்தச் செலவு 3,700 மில்லியன் ரூபாவாகும். இதனைத் தவிர மாகாணசபைகளுக்கும் உள்ளூர் அதிகார சபைகளுக்கும் சொந்தமான 250 சிறிய பாதைகளின் வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டன. இந்த ஆண்டில் பிரதான நெடுஞ்சாலைகள் பலவற்றை நிருமாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து மாத்தறைவரை செல்லுகின்ற தெற்குநெடுஞ்சாலையின் வேலைகள் 15,000 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், காலி/ அம்பாந்தோட்டை நெடுஞ்சாலையின் வேலைகளும் தொடங்கப்படடுள்ளது. கொழும்பு/ கட்டுநாயக்கா, கண்டி/ மாத்தளை ஆகிய நெடுஞ்சாலைகளின் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.*

### பொதுப் போக்குவரத்து

*பொதுப் போக்குவரத்து முறைமையின் திருப்தியற்ற நிலைமையினைக் கருத்திற் கொண்டு மக்கள்மயப்படுத்தப்பட்ட வசுவண்டிக் கம்பெனிகளையும் தனியார் வசுவண்டி இயக்குநர்களையும் பொருளாதார மற்றும் தொழிற்பாட்டு திறமைகளுக்கு அழுத்தம் கொடுக்கின்ற மிகச் சீரிய*

ஒழுங்கமைப்பு கட்டமைப்புகளின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை தொடக்கிவிடப்பட்டுள்ளது. உத்தேச மீளமைப்புத் திட்டத்தின் கீழ் மக்கள்மயப்படுத்தப்பட்ட வசுவண்டிக் கம்பெனிகளின் எண்ணிக்கையை 93 இலிருந்து 11 வரை குறைக்கவும் அனைத்து வசுவண்டித் தொழிற்பாட்டினைக் கூட்டிணைப்பதற்கு மத்திய நிறுவனமொன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரத்தில் தற்போதுள்ள வசுவண்டித் தொகுதியில் 2,000 வசுவண்டிகளுக்கு மேற்பட்ட வண்டிகள் சேர்க்கப்பட்டுள்ளன. பெரிய பழுதுபார்த்தல் வேலைகளை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் தற்பொழுது ஓடாமல் இருக்கின்ற பெருவாரியான வசுவண்டிகளை பழுதுபார்ப்பதற்கும் பிரதான புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றும் ஏற்பாடாகி உள்ளது. பொருளாதார வாய்ப்பற்ற பாதைகளுக்கு பண உதவிகளை ஏற்பாடு செய்யவும் சிறந்த பாடசாலைச் சேவைகளை ஏற்பாடு செய்யவும் அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டுள்ள பணிகள் வருங் காலத்திலும் தொடரும்.

## சூழல்

சூழல் சீரழிவின் பிரதான காரணியாக வறுமை அமைந்துள்ள தென்பதை அங்கீகரித்தலானது அரசாங்கத்தின் சூழல் கொள்கையின் கடையாணியாகும். நிலைபெறத்தக்க மனித அபிவிருத்தியில் நாம்கொண்டுள்ள ஈடுபாடானது வறுமையினை ஒழிப்பதற்கான தேவையினை வற்புறுத்துகின்றது. தீவிரப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சியானது இந்த நோக்கத்தை எய்துவதற்கான ஒரு வழியாகும். விரைவான வளர்ச்சியின் காரணமாக சூழலின் பண்புத்தரத்துக்கு கேடு விளைவிப்பதைத் தடுப்பதற்கு அபிவிருத்திக்கு தடையேற்படாதவாறு அபிவிருத்திச் செயற்பாங்குடன் சூழலியல் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கப்பட்ட சமநிலைப்படுத்தப்பட்ட சூழலியல் பாதுகாப்புத் திறமுறையொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும்.

சூழலியல் விடயங்களோடு சம்பந்தப்பட்ட சட்டங்களும் நிறுவனங்களும் நடைமுறைகளும் மீளாய்வு செய்யப்படும். இதன்மூலம் கைத்தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரை சூழலியல் விடயங்களை பகுத்தறிவார்ந்த முறையிலும் தாமதமின்றியும் கையாளலாம்.

## கமத்தொழில்

அரசாங்கத்தின் கமத்தொழில் அபிவிருத்தித் திறமுறையானது, இத்துறையில் இலாபமீட்டுத் திறனைப் பாதிக்கின்ற, முதலீட்டைக் கட்டுப்படுத்துகின்ற, நிறுவனமுறையான முட்டுக்கட்டைகள், கொள்கை முட்டுக்கட்டைகள் ஆகியவற்றை அகற்றுவதை இலக்காகக் கொண்டுள்ளது. வளர்ந்த நாடுகள் கமத்தொழில் மீதான உதவிப்பணக்

கொடுப்பனவுகளை அகற்றியமையடுத்து எதிர்காலத்தில் உணவு விலைகள் வெகு உயர்வாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் இலங்கை உணவு உற்பத்தியில் அதன் ஒப்பீட்டு அனுகூலத்தை மீளப் பெறுவதுடன் எமது விவசாயிகள் தமது உற்பத்திப்பொருள்களுக்கு வாய்ப்பான விலைகளைப் பெற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்கும். எமது அரசாங்கம் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக உர உதவிப்பணத் திட்டமொன்றையும் சலுகை அடிப்படையிலமைந்த கொடுகடன் நிகழ்ச்சித்திட்டமொன்றையும் ஏற்கனவே செயற்படுத்தியுள்ளதுடன் கமத்தொழில் செய்கருவிகள் மீதான இறக்குமதித் தீர்வைகள், மொத்த விற்பனை வரி ஆகியவற்றையும் குறைத்துள்ளது. எதிர்காலத்தில் ஆண்டு வரவுசெலவுத்திட்டங்கள் இந்தத்துறையில் இலாபமீட்டு திறனை மேம்படுத்துவதற்கான 'இந்த ஊக்குவிப்புகளை விரிவுபடுத்தும். மிகவும் சீர்கேடுற்றுள்ள விரிவாக்கல் சேவைகள் இப்போது மீளமைக்கப்பட்டு வலுவுறுத்தப்பட்டுள்ளன. அவை "கொவிசெவன" நிலையங்களூடாகச் செயற்படுத்தப்படுகின்றன. கடந்த ஒரு வருடத்தில் அத்தகைய 137 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிறிய நடுத்தர அளவுத்துறைக்கென உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அபிவிருத்தி வங்கி கமத்தொழில் அபிவிருத்தியில் முக்கிய பங்களிப்பைச் செய்யக்கூடியதாக இருக்கும். எனினும், ஆராய்ச்சி, கமத்தொழில் வித்துக்கள், பொருள்கள் ஆகியவற்றிலும் கிராமிய ஆதாரவமைப்பிலும் சேமித்து வைத்தல், சந்தைப்படுத்தல் ஆகியவற்றிலும் போதிய முதலீடு இல்லாமை காரணமாக கமத்தொழில் உற்பத்தி மிகக் குறைவாகவே இருந்து வருகின்றது. எனவே, கமத்தொழில் முதலீட்டை அதிகரிப்பதற்காக அரசாங்கம் முதலீட்டுச் சபை ஊக்குகைப் பொதியத்தின்கீழ் பல புதிய ஊக்குகைகளை அளித்துள்ளது.

### கால்நடை அபிவிருத்தி

இலங்கை அரசாங்கத்தினதும் இந்திய அரசாங்கத்தினதும் கூட்டு முயற்சியினூடாக பாலுற்பத்தி இரண்டு வருடங்களில் இரட்டிக்கப்படும். இந்த வேலைத்திட்டம் இரண்டு வருடங்களுள் 10,000 குடும்பங்களுக்கு வருமானத்தை உருவாக்கும். இது 5 வருடங்களில் 30,000 குடும்பமாக அதிகரிக்கும்.

### கல்வி, தேர்ச்சி அபிவிருத்தி

தொழிற்சந்தையை நாடிவருகின்ற இளைஞர்களின் திறமைகளுக்கும் பொருளாதார விரைவளர்ச்சிக்காகத் தனியார்துறையினர் கோரும் திறமைகளுக்கும் இடையிலுள்ள அனைவருக்கும் தெரிந்த முரண்பாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்.

இந்த முரண்பாட்டைக் குறைப்பதற்காக நாம் பல நடவடிக்கைகளைச் செயற்படுத்த ஆரம்பித்துள்ளோம்.

(i) பாடவிதானத்தின்பொருளடக்கம், முறைமையியலை மீளமைப்புச் செய்வதனூடாகவும் மேம்படுத்திய ஆசிரியர் கல்வியினூடாகவும் பாடசாலைகளில் கல்விப் போதனை தரமுயர்த்தப்படும். 3,000 மில்லியன் ரூபா மேலதிகச் செலவில் கிட்டத்தட்ட 2,00,000 ஆசிரியர்களுக்கு பெருமளவு அதிகரித்த வேதனங்களுடன் இலங்கை ஆசிரியர் சேவையொன்று தாபித்தமை தரமான கல்வியைப் போதிப்பதற்கு ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முதலாவது படியாகும்.

சேவைக்காலப் பயிற்சி, தொலைக்கல்விப் பாடவிதானம் என்பவற்றின்மூலம் கற்பித்தல் திறனைத் தரமுயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் முறைமையாக மேம்படுத்தப்படுகின்றன. பாடசாலை நிருவாகத்தை மேம்படுத்துவதற்கு முகாமைப் பயிற்சியுடன் அதிபர்களின்சேவை மீளமைக்கப்படுகின்றது.

(ii) தொழில்நுட்பக் கல்வித்துறையில் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் பயிற்சி சீராக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்ப, வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களில் பாவிதானமும் போதனைமுறைகளும் பணிகொள்வோரின் தேவைகளை பயனுறுதியுடன் பூர்த்திசெய்வதற்குப் பொருத்தமான முறையில் மீளமைக்கப்படுகின்றன. பயிற்சி மதியுரைச் சபைகள் தனியார்துறையின் பங்குகோடலுடன் தாபிக்கப்படும். இந்த நோக்கத்துக்கு தேர்ச்சி அபிவிருத்தி நிதியமொன்றை அமைப் பதற்கு சர்வதேச நன்கொடைவழங்கும் முகமையுடன் தற்போது இடம்பெறும் இணக்கப்பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் தீவிரமாக முன்னெடுத்துச்செல்லும்.

(iii) உயர்கல்வித்துறையில், தகைமை பெறுவோரில் 14 சதவீத்தினர் மட்டும் தற்போது பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். கடந்த தசாப்தத்தில் இந்த எண்ணிக்கை உறுதியாகக் குறைந்து வந்துள்ளது.

எமது கொள்கை பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் :

பிராந்தியங்களில் ஒருசில புதிய பல்கலைக்கழகங்களைத் தாபித்தல். 1995 இல் அநுராதபுரம், இரத்தினபுரி, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 3 புதிய பல்கலைக் கழகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வதிவிட வசதிகளைத் துரிதமாகச் செய்து கொடுத்தலும் இக்கொள்கையின் கீழான இன்னொரு பணியாகும். 1994 இல் பல்கலைக்கழக மாணவர்களில் 32% மாணவர்களுக்கு மட்டும் இடவசதி வழங்கப்பட்டது. கடந்த ஒரு வருடத்தில் இது 42% மாக அதிகரிக்கப்பட்டது. அடுத்த இரண்டு வருடங்களில் 50% மான மாணவர்களுக்கு இந்த வசதியை ஏற்படுத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். ஐந்து வருடங்களில் இது 70% மாக உயர்த்தப்படும். கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஆதாரவமைப்பு அபிவிருத்தி பொருட்டும் 17 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு

வறுமை ஒழிப்பானது அரசாங்கத்தின் அபிவிருத்தித் திறமுறையில் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாக உள்ளது. கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட புதிய நலனோம்பல் செலவின நிகழ்ச்சித்திட்டமான சமூர்த்தித் திட்டம் 12 இலட்சம் குடும்பங்களை எட்டியுள்ளது. மக்கட்டொகையினரில் ஏழ்மைப் பிரிவினருக்கான வருமான மாற்றங்களை அதிகரிப்பதோடு இந்த நிகழ்ச்சித்திட்டம் சுயவேலைவாய்ப்பு அந்தஸ்தை அவர்கள் பெறுவதற்கு அவர்களுக்கு உதவும். கமத்தொழில், சிறிய நீர்ப்பாசன வேலைகள் போன்றவற்றில் அரசாங்கத்தின் சிறிய நடுத்தர அளவு அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் சமூர்த்தி குடும்பங்களைப் பணிக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. மேலும் அரசாங்கம் கமத்தொழில், கால்நடை, கடற்றொழில் அபிவிருத்தி, சிறிய கிராமியக் கைத்தொழில் ஆகியவற்றிலும் பிற சேவைகளிலும், தனியார்துறையில் வருமான உருவாக்கத்தையும் தொழில் வாய்ப்பையும் மேம்படுத்துவதற்காக சிறிய நடுத்தர அளவு தொழில்முயற்சிகளுக்கு புதிய அபிவிருத்தி வங்கியொன்றை அமைப்பதற்கு எதிர்பார்க்கின்றது. சமூர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றுகை பல நன்மைகளை அளித்து வருகின்றது. சிறிய நீர்ப்பாசனக் கால்வாய்கள், வீதிகள், மதகுகள், கிணறுகள் போன்ற வாய்ப்புள்ள கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஒரு குறுகிய காலப்பகுதியில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சமூர்த்தி அமைப்புகள் கிராமிய சமூக அபிவிருத்தியில், சிவப்புநாடா தொழிற்பாடுகளைக் குறைக்கும் ஊக்கியாக அமையும்வகையில் திட்டமிடப்பட்டுள்ளன.

புனர்வாழ்வளிப்பும் புனர்நிர்மாணமும்

கிழக்கு மாகாணத்திலும், வடக்கில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் உள்ள யுத்தத்தினால் பேரழிவுற்ற இடங்களில் புனர்நிர்மாண நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப் படுகின்றது. கிழக்கில் வீடுகளின் நிர்மாண வேலைகளும் அகதிகளை மீளக் குடியமர்த்தும் வேலைகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

இந்த வேலைகளை இரண்டு சனாதிபதி செயலணிக் குழுக்கள் கூட்டிணைக்கின்றன.

## இனவிவகாரமும் தேசிய நல்லிணக்கமும்

பல்வேறு இன, மத சமூகங்களை ஒத்திசைவான முறையில் ஒருங்கு சேர்க்கும் அகல்விரிவான நிகழ்ச்சித்திட்டமொன்று புதிய இனவிவகார, தேசிய நல்லிணக்க அமைச்சினால் செயற்படுத்தப்பட்டுள்ளது. மக்கட் தொகையினரில் அனைத்துப் பிரிவினரினையும் கருத்திற்கொண்டு பெருந்தொகையான கருத்தரங்குகளும் வேலையரங்குகளும் ஒழுங்கு செய்யப்பட்டன.

பிள்ளைகளுக்கென விசேடமாக உருவாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பாடசாலைகளில் செயற்படுத்தப்படும்.

செயலிழந்துள்ள அரசகரும மொழிக் கொள்கையைச் செயற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க நிறுவனங்கள் இரண்டுமொழிகளிலும் தொழிற்படுவதற்கு உதவும்வகையில் தமிழ் மொழியில் புலமைபெற்ற பெருந்தொகையானவர்கள் வெகுசீக்கிரத்தில் அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

இதேபோல, ஆசிரியர் சேவையின் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் பெருந்தொகையான தமிழ்பேசும் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். இதன்மூலம் தமிழ்ப் பாடசாலைகளை மீளவமைப்பதற்கும் தமிழ், சிங்கள மொழிகளைப் பாடசாலைகளில் போதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே, எனது அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டபொழுது நாங்கள் பல பாரிய சவால்களைச் சமாளிக்க வேண்டியவர்களாக இருந்தோம். இனிது தொழில்படும் சனநாயகமுறையொன்றை நிலைநாட்டும்பொருட்டு சனநாயக நிறுவனங்களையும் வழக்குகளையும் மீண்டும் கட்டியெழுப்புதல்; திறமையற்ற நிலையிலும் கவனமில்லாத நிலையிலும் இயங்கிய அரசாங்கச் சேவையினை மீண்டும் உயிர்பெறச் செய்து ஊக்கமளிக்கும் பொருட்டு அரசியல் மற்றும் நிருவாக முறையினை ஊழல்களிலிருந்தும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதிலிருந்தும் விடுவித்துத் தூய்மையாக்குதல் ; தீவிரப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அடிப்படையான பொருளாதாரச் சீர்திருத்தங்களை

நடைமுறைக்குக் கொண்டுவருதல்; இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல் என்னும் மிகப்பெரிய பணியினை மேற்கொண்டு பேரழிவினைக் கொண்டுவருகின்றதும் எமது நாட்டில் ஏற்பட்ட மிகக்கொடூரமானதும் ஒரு யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தல் ஆகியன அந்த மாபெரும் சவால்களாகும். இந்தச் சகல சவால்களையும் சமாளிக்கும் பாரிய பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். தீர்வுகளை நாடும் பொழுது இறுக்கமான பாரம்பரிய மனப்பாங்குகளையும் அச்சங்களையும் உடைத்தெறிய நாங்கள் தயங்கவில்லை. தீர்வுகளை ஆக்கிக் கொள்ளும் போது அடிப்படையான மற்றும் புதிய கொள்கைகளையும் திறை முறைகளையும் ஏற்றுக்கொள்வதற்கும் நாங்கள் அஞ்சவில்லை.

நாட்டை ஆளுவது மாத்திரம் எமது பணியாக இருக்கவில்லை. நாங்கள் முன்னோக்கி முதலாவது அடியை வைப்பதற்கு முன்னரே பல விடயங்களை நேராக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

அரசாங்கம் என்னும் வாகனத்தை சரியான பாதையில் செலுத்துவதில் நாங்கள் வெற்றிகண்டு பொருளாதார அபிவிருத்தித்துறையில் பீடுநடை போட ஆரம்பித்துள்ளோம் என்பதை பணிவடக்கத்துடன் கூறுகின்றேன்.

இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை, யுத்தத்தை முடிவுறுத்துவதில் நாங்கள் வெற்றி காண்போம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. அதே போன்று அதிகாரப் பரவலாக்கல், மக்களுடன் கலந்துரையாடல், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய மூன்று வகைப்படுத்தப்பட்ட திறமுறைகளைக் கொண்ட சமாதானத்துக் கான எமது திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

எமது நாட்டைப்போன்ற சின்னஞ்சிறிய நாடு முகம்கொடுக்க முடியாத அளவுக்குபிரமாண்டமான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கத் தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் உள்ள நாங்கள் அனைவரும் குறுகிய, தனிப்பட்ட மனப்பான்மைகளைக் கைவிட்டு கடமையுணர்ச்சியோடும் பகுத்தறிவோடும் நடந்துகொள்ள வேண்டுமென முழுநாடும் எதிர்ப் பார்க்கின்றது.

இடர்கள் பல எங்களைத் தாக்கிய சந்தர்ப்பங்களில் தயங்காது எங்களுக்கு ஆதரவு அளித்த சர்வதேச சமூகத்துக்கு எனது அரசாங் கத்தின் சார்பிலும் இலங்கை மக்கள் சார்பிலும் உளங்கனிந்த நன்றிய றிதலைத் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இவர்களது ஆதரவு நாங்கள் தேர்ந்தெடுத்துள்ள பாதையில் முன்னேறுவதற்கு அவசியமான மன உறுதியினையும் சக்தியினையும் எமக்கு அளிக்கின்றது.

வடக்கு.கிழக்கிலும் தெற்கிலும்வாழுகின்ற எமது மக்களில் பெரும்பான்மையினர் எமக்கு இடையறாது வழங்கும் பேராதரவு காரணமாக சகல சவால்களையும் சமாளித்து வெற்றி காண்பதற்கு அவசியமான சக்தியும் மனவுறுதியும் வளமூலங்களும் எமக்குக் கிடைக்கும் என நாங்கள் நம்புகின்றோம்.

நன்றி. சபாநாயகர் அவர்களே.

Printed at the Department of Government Printing, Sri Lanka.